53506

சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – கரூர் மாவட்டம் – குளித்தலை வட்டம், ஆதனூர் கிராமம், எருதுகோன்பட்டி(கோரமடை) ஏரியை ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டிலிருந்து பொதுப்பணித் துறை கட்டுப்பாட்டிற்கு மாற்றம் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி–3)துறை

அரசாணை (நிலை) எண். 117

நாள் 21.09.2021
பிலவ, புரட்டாசி 5 ,
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டவை:

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண். 36476/2020/பரா.3.3, நாள் 07.04.2021, 04.08.2021 மற்றும் 21.08.2021

-----

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதங்களில், கரூர் மாவட்டத்திலுள்ள கடவூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஆதனூர் கிராம ஊராட்சியில் எருதுகோன்பட்டி குக்கிராமத்திலுள்ள கோரமடை ஏரியானது ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டில் உள்ளது என்றும், கோரமடை ஏரியின் மொத்த ஆயக்கட்டு அடிப்படையில் அதிகமாக இருப்பதால் அதனை பொதுப்பணித் துறையின் வசம் ஒப்படைத்திடுமாறு பொதுப்பணித்துறை தெரிவித்துள்ளதாகவும், கரூர் மாவட்டம், கடவூர் ஊராட்சி ஒன்றியத்தின் ஆதனூர் கிராம ஊராட்சியில் அமைந்துள்ள எருதுகோன்பட்டி குக்கிராமத்தின் சர்வே எண்.348, 350, 351, 357, 358 மற்றும் 359–ல் விஸ்தீரணம் 23.63.5 ஹெக்டேர் பரப்பளவிலான எருதுகோன்பட்டி கோரமடை சிறுபாசன குளம் (Minor Irrigation Tank) தற்போது ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டில் உள்ளது என்றும் கரூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் முன்மொழிவில் கோரமடை சிறுபாசன குளமானது மழைக் காலங்களில் நீர் நிரம்பி நிலத்தடி ஆதாரத்தினை உயர்த்துவதாக மட்டுமே உள்ளது என்றும், எனவே, இக்குளத்தினைச் சீரமைத்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது என்றும் மேலும் இப்பகுதியைச் சுற்றியுள்ள குக்கிராமங்களில் பொது மக்களின் விவசாய நிலங்களில் நீர் பாசன வசதியினைப் பெருக்கி, விவசாய விளை நிலங்களின் பரப்பை அதிகரித்திட எருதுகோன்பட்டி குக்கிராமத்தில் உள்ள கோரமடை சிறுபாசன குளத்தினை ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டிலிருந்து பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான உரிய தொழில்நுட்ப விளக்கங்களுடன் கரூர் மாவட்ட ஆட்சித்

தலைவர் கருத்திசைவினைத் தெரிவித்துள்ளதாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், இது குறித்து எருதுகோன்பட்டி குக்கிராமத்தில் உள்ள கோரமடை சிறுபாசன குளத்தினை ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டிலிருந்து பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டிற்கு மாற்றம் செய்திட மாவட்ட ஆட்சித் தலைவர் கருத்திசைவு செய்துள்ளதாலும், தொடர்புடைய கடவூர் ஊராட்சி ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாலும், தொடர்புடைய பொதுப்பணித் துறை உரிய தொழில் நுட்ப விளக்கங்களைத் தெரிவித்து மேற்படி சிறுபாசன குளத்தினைப் பெற்றுக் கொள்ள அனுமதி கோரியுள்ளதாலும் கரூர் மாவட்டம், ஆதனூர் கிராம ஊராட்சியில் உள்ள எருதுகோன்பட்டி குக்கிராமத்தில் சர்வே எண். 348, 350, 351, 357, 358 மற்றும் 359ல் விஸ்தீரணம் 23.63.5 ஹெக்டேர் பரப்பளவு உள்ள எருதுகோன்பட்டி கோரமடை சிறுபாசன குளத்தை ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டிலிருந்து பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டிற்கு மாற்றிடலாம் எனவும் இதற்கு எந்தவொரு ஆட்சேபணையும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரையினை அரசு கவனமாக ஆய்வு செய்த பின் அதனை ஏற்று கரூர் மாவட்டம், கடவூர் ஊராட்சி ஒன்றியம், ஆதனூர் கிராமம், எருதுகோன்பட்டி(கோரமடை) ஏரியை ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டிலிருந்து பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டிற்கு மாற்றம் செய்ய அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. இந்த ஆணை பொதுப்பணித் துறையின் அ.சா.கு.எண்.14723/ என்.2/2021, நாள் 24.08.2021 மற்றும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் அ.சா.கு.எண்.27351/நி.நி.1(2)/2021-1, நாள் 26.08.2021ல் பெற்ற ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**கே.கோபால்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**பெறுநர்**

இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை – 15.
மாவட்ட ஆட்சித் தலைவர், கரூர் மாவட்டம்.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
பொதுப்பணித் துறை, சென்னை–9.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை–9.

**நகல்**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலர் அவர்களின் முதன்மை தனிச் செயலாளர், சென்னை–9.
இருப்புக்கோப்பு

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**